www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6
ந.க.எண். 018034/எம்/இ1/2024, நாள் 27.3.2024

பொருள் : பள்ளிக்கல்வி குழந்தைக் கடத்தல் தொடர்பான பொய் செய்தி வதந்திகள் பரப்புவது குறித்து/விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - சார்பு.

பார்வை: 1.பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9. கடிதம் எண்.efile2350 பொது1(2)/2024-1, நாள்.20.03.2024
2.சென்னை-5 தகவல் சரிபார்ப்பு குழு, இலக்கு இயக்குநரின் கடித எண்.0036/FCU/2024, நாள் 15.03.2024.

*****

பார்வையில் (2) காணும் கடிதத்தில் பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக தமிழக மக்களை மிகப்பெரும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ள செய்தி குழந்தைக்கடத்தல் தொடர்பான வதந்திகள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. எனவே, கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு பின்வரும் விழிப்புணர்வு அறிவிப்பினை "வடமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் குழந்தைகளைக் கடத்துவதாக சில பொய்யான வீடியோ, ஆடியோக்கள் தமிழ்நாடு முழுவதும் சமூகவலைதளங்கள் மற்றும் இணையதளங்களில் பரப்பப்படுகின்றன. அத்தகைய சம்பவங்கள் ஏதும் நடக்கவில்லை. அவற்றில் பரப்பப்படும் வீடியோக்களில் குறிப்பிடும் சம்பவங்கள், வெவ்வேறு மாநிலங்களில் கடந்த காலங்களில் நிகழ்ந்தவை ஆகும். அப்படியிருக்க, ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு எதிராக வதந்தி பரப்புவது சட்ட விரோதமானது.

பொது மக்களுக்கு குழந்தை கடத்தல் தொடர்பான சந்தேகம் இருப்பின் 100,1098,112 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொள்ளவும் எவர் மீதும் வன்முறையில் ஈடுபட கூடாது." அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அறிந்துகொள்ளத் தக்க வகையில் உரிய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: பார்வை கடித நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர்
27.3.24

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்
1.அரசு துணைச் செயலாளர்,
பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.
2.இலக்கு இயக்குநர்,
தகவல் சரிபார்ப்புக்குழு,
கலைவாணர் அரங்கம்,
திருவல்லிக்கேணி, சென்னை-5

018034

பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

கடிதம் எண். efile.2350 பொது1(2)/2024-1, நாள். 20.03.2024

அனுப்புநர்

திரு.க.வெங்கடகிருஷ்ணன்.,எம்.ஏ.,
அரசு துணைச்செயலாளர்.

27 MAR 2024

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.(இ)
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6. (இ)
தனியார் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.(இ)

www.Padasalai.Net

அய்யா,

பொருள்; பள்ளிக்கல்வி - குழந்தைக் கடத்தல் தொடர்பான பொய் செய்தி வதந்திகள் பரப்புவது குறித்து/விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - தொடர்பாக.

பார்வை; இலக்கு இயக்குநர் தகவல் சரிபார்ப்புக்குழு கலைவாணர் அரங்கம், திருவல்லிக்கேணி, சென்னை-5 .நாள்.15.03.2024.

-----

பார்வையில் காணும் மனு நகல் தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு துணைச்செயலாளருக்காக.

20/3/24

நகல்:-
இலக்கு இயக்குநர்
தகவல் சரிபார்ப்புக்குழு
கலைவாணர் அரங்கம்
திருவல்லிக்கேணி
சென்னை - 5.

# FACT CHECK UNIT

அனுப்புநர்
இலக்கு இயக்குநர்,
தகவல் சரிபார்ப்புக்குழு,
கலைவாணர் அரங்கம்,
திருவல்லிக்கேணி,
சென்னை – 5.

பெறுநர்
J. குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
பள்ளிக் கல்வி துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை

கடித எண். 0036 / FCU / 2024 நாள்: 15.03.2024

www.Padasalai.Net

ஐயா,

பொருள்: குழந்தை கடத்தல் தொடர்பான பொய்ச்செய்தி, வதந்திகள் – விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பு.

குறிப்பு: 1. Thanthi TV News dated 13th March, 2024 – https://www.thanthitv.com/News/TamilNadu/continued-child-trafficking-tamilnadu-southern-districts-thanthitv-252020

2. Facebook post – https://www.facebook.com/reel/1457607091502341

3. Facebook reel – https://www.facebook.com/reel/1465943754360380

வணக்கம். சமூக அமைதிக்கும் அறிவியல் மனப்பான்மைக்கும் எதிரான பொய்ச்செய்திகள், வதந்திகள், வெறுப்புப் பிரச்சாரங்கள் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் தமிழ்நாடு உண்மை சரிபார்ப்புக்குழு (Fact Check Unit) முனைப்பாக இயங்கி வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

அண்மைக்காலமாக தமிழக மக்களை மிகப்பெரும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ள செய்தி குழந்தைக்கடத்தல் தொடர்பான வதந்திகள் என்பதை தாங்கள் அறிவீர்.

குழந்தைக்கடத்தல் தொடர்பான பொய்ச்செய்திகள் வாட்ஸ்ஆப் (WhatsApp), முகநூல் (Facebook), எக்ஸ்(X, formally known as twitter), இன்ஸ்டாகிராம் (Instagram) போன்ற சமூக வலைதளங்களிலும், ஊடகங்களிலும் பரவுவதை தடுப்பதற்கு உண்மை சரிபார்ப்புக்குழுவும், சென்னை மாநகராட்சியுடன் இணைந்து தமிழக காவல்துறையும் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையிலும், இக்குழந்தைக் கடத்தல் செய்தியானது பல்வேறு பரிமாணங்களில் சமுதாயத்தில் குறிப்பாக பள்ளிக்குழந்தைகளிடையும், பெற்றோர்களிடையும் அச்ச உணர்வு, பாதுகாப்பின்மை போன்று பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, தெருக்களில் கடத்தல் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்படுவதும், குழந்தைகளை பெற்றோர்கள் விளையாட அனுப்ப வேண்டாம் என்பது போன்ற காணொளிகளும், குழந்தைகள் விளையாட்டுத்தனமாகவும், அச்சத்தின் காரணத்தாலும் தங்களை மர்ம நபர்கள் உணவு பண்டங்களையும், மிட்டாய்களையும் தந்து கடத்த முயன்றனர் என்று ஆசிரியர்களிடமும், பெற்றோர்களிடமும் தவறாகச் சொல்லியும், வீடியோக்களை பேசி சமூக வலைதளங்களில் பதிவிடுகின்றனர்.

இது தொடர்பாக கண்டறியப்பட்ட உண்மைச் சம்பவங்கள் தங்கள் பார்வைக்காக (குறிப்பு 1, 2 ,3) இணைக்கப்படுகிறது.

www.Padasalai.Net



எனவே இது பள்ளிக்குழந்தைகளிடம் உளவியல்ரீதியான பல தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதால் பள்ளிக்கல்வித்துறை அனைத்து பள்ளி ஆசிரியர்கள் மூலம் குழந்தைகளிடமும், பெற்றோர்களிடமும் விழிப்புணர்வு செய்தியைப் பரப்ப வேண்டும் எனவும், கல்வி தொலைக்காட்சி போன்ற சமூக ஊடகங்களிலும் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டு குழந்தைகள் தவறான வீடியோக்கள் பதிவிடுவதை தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விழிப்புணர்வு அறிவிப்பு:**

"வடமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் குழந்தைகளைக் கடத்துவதாக சில பொய்யான வீடியோ, ஆடியோக்கள் தமிழ்நாடு முழுவதும் சமூகவலைதளங்கள் மற்றும் இணையதளங்களில் பரப்பப்படுகின்றன. அத்தகைய சம்பவங்கள் ஏதும் நடக்கவில்லை. அவற்றில் பரப்பப்படும் வீடியோக்களில் குறிப்பிடும் சம்பவங்கள், வெவ்வேறு மாநிலங்களில் கடந்த காலங்களில் நிகழ்ந்தவை ஆகும். அப்படியிருக்க, ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு எதிராக வதந்தி பரப்புவது சட்ட விரோதமானது.

பொதுமக்களாகிய நீங்கள், குழந்தை கடத்தல் தொடர்பான சந்தேகம் இருப்பின் 100, 1098, 112 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொள்ளலாம். எவர் மீதும் வன்முறையில் ஈடுபடக் கூடாது."

R. Karthik 15/3/24
இலக்கு இயக்குநர்,
தகவல் சரிபார்ப்புக்குழு

Copy to

Director of information & public relations
Department of information & public relations
Secretariat, Chennai.